செ.வெ.எண்: 52 நாள்:26.01.2018

# அரியலூர் ஸ்ரீகோதண்ட ராமசாமி திருக்கோவிலில் நடைபெற்ற சமபந்தி விருந்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூரில் **"குடியரசு தின விழாவை"** முன்னிட்டு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தீண்டாமை ஒழிப்பு திட்டம் மூலம் **ஸ்ரீகோதண்டராமசாமி திருக்கோவிலில்** இன்று (26.01.2018) நடைபெற்ற **சமபந்தி விருந்தில்** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் கலந்துகொண்டார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலயங்கள் தோறும் அன்னதானம் எனும் திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும் 448 திருக்கோயில்களில் **குடியரசு தின** விழாவினை முன்னிட்டு அன்னதானம் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் அருள்மிகு ஆலந்துரையார் கோதண்டராமசாமி திருக்கோயில், திருமானூர் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், திருமழப்பாடி அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், கங்கைகொண்ட சோழபுரம் அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயம், கல்லங்குறிச்சி அருள்மிகு கலியுக வரதராஜ பெருமாள் திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களில் நாள்தோறும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

அனைத்து மக்களும் சமம் என்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில் தமிழக அரசின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் தீண்டாமை ஒழிப்பு தொடர்பாக ஒவ்வொரு **குடியரசு தினத்தை** முன்னிட்டு சிறப்பு சமபந்தி ஏற்பாடு செய்யப்பட்டு, அனைத்து சமூக மக்களுக்கும் ஒன்றாக விருந்து அளிக்கும் நோக்கில் இச்சமபந்தி வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் க.இளங்கோ, அரியலூர் கோட்டாட்சியர் மு.மோகனராஜன்,இந்து சமய அறநிலைத்துறை உதவி ஆணையர் செந்தில்குமார், தனி வட்டாட்சியர் தேன்மொழி, அரியலூர் வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி, அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.